[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

5. பிரதான எதிர்க்கட்சி (அ.இ.அ.தி.மு.க.) உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி வெளிநடப்பு, பேரவைத் தலைவர் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், Zero Hour-ல் நேரமில்லா நேரத்தில், ஒரு பிரச்சினையை எழுப்புகிறேன், அதற்கு அனுமதி தாருங்கள் என்று என் room-ல் கேட்டார், அதற்கு அனுமதி தந்தோம். அவர், அந்தப் பிரச்சினையை எழுப்பி, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லி விட்டார்கள். ஏற்கெனவே விதி 55-ன்கீழ் கொடுக்கப்பட்டது. Agenda-வில் எடுக்கப்பட்ட ஒரு கவன ஈர்ப்பு தீர்மானமாக இருந்தால்தான், இரண்டாவது கேள்விக்கு அனுமதி. அப்படி இல்லையென்றால், Zero Hour-ல் 'ஒரு கேள்வி, ஒரு பதில்', அதோடு முடிந்தது. ஆகவே, பேரவைத் தலைவர் என்ற முறையில், 'நான் அவரைக் கேள்விக் கேட்க அனுமதிக்கவில்லை என்கிற முறையில் 'வெளிநடப்பு செய்கிறேன் என்று உறுப்பினர் சொன்னதை' இந்த அவைதான் நல்ல முடிவு செய்ய வேண்டும். ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் நடந்த— மாண்புமிகு LOP அவர்கள், மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, முழுமையாக கேள்வி கேட்க அனுமதித்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே முழுமையாக கேள்வி கேட்க சொன்னார்கள். முழுமையாக கேள்விக் கேட்டு, பதிலையும் பெற்றாகிவிட்டது என்பதையும், அதன் பின்னர் அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.